RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணன் புதினங்களில் பெண்கள்

ரா. வினோதினி [அ, *], தா.அ. சிரிஷா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600032, தமிழ்நாடு, இந்தியா

# Women's in Rajam Krishnan's Novels

R. Vinothini [a, *], D.A. Sirisha [a]

[a] PG & Research Department of Tamil, Chellammal Women's College, Guindy, Chennai -600032, India

* Corresponding Author: manikandanvinothini65@gmail.com

Received: 26-11-2025
Revised: 17-02-2026
Accepted: 05-03-2026
Published: 16-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan is one of the unparalleled female literary figures of the twentieth century. When she began writing, there were very few writers who spoke about feminism. The study clarifies the way she has documented the daily life struggles of women in family structures and women ' s labor organizations. Amidst writers who describe fantasies and a woman ' s physical appearance, he has personally witnessed the themes of his works and documented the daily lives of marginalized people like a documentary film. This research focuses on how the author conveyed to the public, through her works, the problems faced by women in the context of family and society, and the solutions to those problems.

**Keywords:** Feminism, Marginalized people, Sexual harassment, Social issues, Female workers.

## முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க கால பெண் எழுத்தாளர்களுள் முக்கியமானவர் ராஜம் கிருஷ்ணன். சிறுகதை மூலம் தனது எழுத்து பயணத்தை தொடங்கிய இவர் பின்னாட்களில் புதினங்கள் வழியே பரவலாக அறியப்பட்டவர். சிறுகதைகள், கட்டுரைகள், சிறுவர்களுக்கான படைப்புகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் என பல தளங்களிலும் காலடி பதித்தவர். இவரது படைப்புகளின் வழியே வணிக நோக்கமின்றி கொள்கைகளுக்காக எழுதியவர் என்பது தெளிவாகிறது. மேலும் தனது படைப்புகளில் கற்பனையின்றி நேரில் சென்று கள ஆய்வு செய்து உண்மையை மக்களிடம் கொண்டுச் சேர்த்தவர் இதனால் அன்றைய காலகட்டத்தில் கடும் விமர்சனத்துக்குள்ளானார். விளிம்பு நிலை மக்களைப் பற்றிய இவரது படைப்புகள் யாவும் வெவ்வேறான கதை தளங்களைக் கொண்டது. இவரது படைப்புலகில் பெண்கள் தனித்துவம் உடையவர்களாகவே விளங்குகின்றனர். காலம் காலமாக பெண்கள் நிலையை எடுத்துரைப்பவர்களும் கூட சில நேரங்களில் பெண்களுக்கான சிக்கல்களுக்கு தீர்வுகளை கொடுப்பதில்லை. ஆனால் இராஜம் கிருஷ்ணனின் படைப்புகளில் பெண்களின் சிக்கல்களையும் சிக்கல்களுக்கான தீர்வுகளையும் விளக்கியுள்ளார். இராஜம் கிருஷ்ணனின் புதினங்களில் காணலாகும் பெண்களின் சில சிக்கல்களை இவ்வாய்வின் வழியே அறியலாம்.

## குடும்பத்தில் பெண்களின் நிலை

குடும்பம் என்ற அமைப்பு முறையில் ஆண் பெண் ஆகிய இருவருக்குமே இடம் உண்டு எனினும் பெண்ணே ஒரு குடும்பத்தின் மதிப்பு மிக்கவளாகவும் பெருமை மிக்கவளாகவும் அடையாளப்படுத்தப்படுகிறாள். ஆண் திருமணத்திற்கு பின்னரே சமுதாயத்தில் மதிப்பு மிக்கவனாக போற்றப்படுகிறாள்.

“தற்காத்து தற்கொண்டாற் பேணித்தகை சான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்”(குறள்.56)

என்று வள்ளுவரும் பெண்ணின் கடமைகளை பற்றி கூறுகிறார்.

குடும்பம் என்ற சூழலில் ஓர் அங்கமாக பார்க்கப்படும் பெண் தனித்துவம் கொண்ட தனது உரிமைகளையும் தனது கருத்துக்களையும் தனித்து முடிவெடுக்கும் திறன்களையும் பெற்றவர்களாக அடையாளப்படுத்தப்படுவதில்லை. தான் சார்ந்துள்ள தனது கணவன் குழந்தைகள் உறவினர்கள் என பிறருக்காகவே வாழ்பவர்களாக இருக்கிறாள். கணவன் மனைவி இடையே பொருளாதாரம், கல்வி, அழகு மற்றும் குலம் போன்றவற்றில் ஏற்பாடு இருக்கும் போது இருவருக்கும் இடையே சிக்கல்கள் தோன்றுகிறது. இருவரின் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் போது தான் சிக்கல்கள் ஏற்படுவதில்லை. இராஜம் கிருஷ்ணன் "மாறி மாறிப் பின்னும்" என்ற புதினத்தில் வரும் கதை தலைவனான நாதன் வேறு பெண்ணுடன் தொடர்பு கொண்டவனாகவும் குடும்பத்தில் பொறுப்பற்றவனாகவும் இருக்கிறான். இதனால் நாதனின் மனைவி ரேவதிக்கு அவர்களது வீட்டில் வாடகைக்கு குடியிருக்கும் சுதாவும் சுதாவின் கணவரும் உதவுகின்றனர். ஆனால் நாதன் அதை தவறாக புரிந்து கொண்டு சுதாவின் கணவருடன் ரேவதியை இணைத்து பேசுகிறான்.

"சொந்த புருஷனுக்கே கூட்டிக் கொடுக்கும் ஒரு கழுதையை குடி வச்சிட்டு போனாலும் போகாமல் என் குடும்பத்துக்கு உலை வைக்கிறத சகிக்கிறேன். என் ஆபிசில் வந்து என்னைப் பற்றி விசாரிக்கிறா நான் ஆம்பள எப்படி வேணாலும் இருப்பேண்டி!" (இராஜம் கிருஷ்ணன் - 2018)

நாதன் தான் வேறு பண்ணுடன் தொடர்பில் இருப்பதை தவறு என புரிந்து கொள்ளாமல் பெண் என்பவள் மட்டும் தவறு செய்யக்கூடாது என்ற எண்ணத்தோடு செய்யாத தவறுக்கு பழி போடுகிறான்.

தன் மீதான குற்றத்தை பெண்கள் மீது திணித்து தான் தப்பித்துக் கொள்ளும் ஆண்களின் ஆதிக்க அடக்கு முறையை இராஜம் கிருஷ்ணன் தெளிவுபடுத்துகிறார். மேலும் ரேவதியின் மகன் பரத் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகிறான் எனவே ரேவதி மகனைக் கண்டிக்கிறாள். பரத் தன் தாய் அடித்ததை அப்பாவிடம் கூறுகிறான். தன் மகனை திருத்தாமல்

"இது பாருடி இது மாதிரி ஏதேனும் புகார் இனிமேல வந்தால் நான் கெட்டக் கோபக்காரனா இருப்பின் எங்கோ தறி கெட்ட குடும்பத்திலிருந்து உன்னைக் கொண்டு வந்து என் கழுத்தில் கட்டிட்டா". (இராஜம் கிருஷ்ணன் - 2018)

என்று தன் மனைவியை திட்டுகிறான். இங்கு பெயரளவில் மட்டும் குடும்பத் தலைவன் என்று இருக்கும் ஆண்களால் பெண்களின் நிலை எவ்வாறு சிதைகின்றது என்பது பற்றி எடுத்துரைக்கின்றார் இராஜம் கிருஷ்ணன். இப்படி திட்டிக்கொண்டே இருந்தால் ஒரு பெண் எவ்வளவு நாள் வாழ முடியும். எனவே ரேவதி வீட்டை விட்டு வெளியேறுகிறாள்.

பெண்ணானவள் ஆணின் வன்முறைகளுக்கு உட்பட்டு கட்டாயத்தின் பெயரில் வாழ வேண்டிய அவசியம் இல்லை. நீங்க இயலாத பந்தம் திருமண பந்தம் என்பதில்லை. மன தைரியம், உலக அனுபவம் இருந்தால் இச்சமூகத்தை பெண்களால் தனித்து எதிர்கொள்ள முடியும். மேலும் கல்வியிலும் பொருளாதாரத்திலும் சுயசார்பு வாழ்க்கையையும் வாழ முடியும் என்பதை மாறி மாறிப் பின்னும் புதினத்திலும் வீடு என்ற புதினத்திலும் பதிவு செய்துள்ளார்.

## சமுதாயத்தில் பெண்களின் நிலை

நடைமுறை வாழ்க்கையில் பல காலங்களாக பின்பற்றப்படுகின்ற பழக்கவழக்கங்களின் காரணமாக தேவையற்ற சில வழக்கங்கள் இச்சமூகத்தில் வலுவடைந்து காணப்படுகிறது. இவ்விதமே பெண்களுக்கான பல சிக்கல்களும் வேரூன்றி அழிக்கவியலாததாய் உரு பெற்றுள்ளது. அவற்றில் குழந்தை பேறின்மை, விதவை மறுமணம், பாலியல் தீண்டல்கள் போன்றனவும் அடங்கும்.

கரிப்பு மணிகள் புதினத்தில் பொன்னாச்சி அவளின் சின்னாச்சியுடன் தங்கி வேலை பார்க்கிறாள். மாதந்தோறும் முதல் தேதி அன்று வாடகை பணமும் சீட்டு பணமும் கொடுத்து விட வேண்டும். பொன்னாச்சியின் தந்தைக்கு கண்பார்வை இல்லை. இந்நிலையில் உப்பளத்திற்கு வேலைக்கு செல்கிறாள். ஆனால் பொன்னாச்சிக்கு அங்கு நடப்பவை மிகுந்த மனவேதனையை அளிக்கிறது

வேலையாட்களிடம் வேலை வாங்குபவன் கீழ்க் கண்ணால் பொன்னாச்சியை பார்க்கிறான். அவனது பார்வையிலே அவள் துடித்து போகிறாள்.

"போகும் போதும் வரும்போதும் கழுத்தில் தொடுவதும் கையை தீண்ட முயல்வதும் இன்னும் அருவருப்பான செய்கைகள் செய்வதுமாக இருக்கிறான்." (இராஜம் கிருஷ்ணன் - 2011)

தன் குடும்ப சூழ்நிலை காரணமாக வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு இச்சமுதாயத்தில் பாதுகாப்பு இல்லை என்பதை பதிவு செய்கிறார். இவரது கூட்டு குஞ்சுகள் புதினத்திலும் தீப்பெட்டி தொழிற்சாலையில் பணிபுரியும் பெண்களை முதலாளிகள் சோப்பு, அலங்கார பொருட்கள், வாசனைப் பொருட்கள் வாங்கி தருவதாகவும் சினிமாவுக்கு கூட்டி போவதாகவும் ஏமாற்றி சீரழிக்கும் நிலையை,

"அதுங்க முதல்ல மொரண்டாலும் வழியில்லாம இவனுவ இஷ்டத்துக்கு அடங்கிப் போகுதுங்க, நாயித்துக் கிழமயில கொட்டடி கூட்ட வான்னு கூப்பிடுறா.... தீப்பொட்டி ஆபீசுல வேலை பாக்கும் குமரிப் பொண்ணுங்க எந்நேரமும் கழுவுகள் தெரியும் எடத்துல இருக்குதுங்கன்னு சொன்னா தப்பில்லை" (இராஜம் கிருஷ்ணன் - 2011)

என்று பதிவு செய்துள்ளார். அடிப்படை வசதிகளுக்காக தனது ஒவ்வொரு நாட்களையும் கழுகிடமிருந்து தப்பிக்கும் குருவி குஞ்சுகளாக வாழும் பெண்களின் அவல நிலை கூட்டு குஞ்சுகள் புதினம் தெளிவுபடுத்துகிறது.

## முடிவுரை

இராஜம் கிருஷ்ணன் ஒரு பெண்ணியச் சிந்தனையாளர் பெண்களுக்காகவும் அவர்களின் உரிமைகளுக்காகவும் போராடியவர். பண்ணை மகளிர் உருவாக்கப்படுதல், ஆனாதிக்க அடக்குமுறைகள் என பெண்களின் இழிநிலையை காட்டியவர். வலுவான மன தைரியம் கொண்ட பெண்களையும், போராடும் குணம் படைத்தவர்களாகவும், வாழ்க்கை போராட்டத்தில் தன்னை மீட்டெடுக்கும் சிற்பிகளாகவும் பெண்களைப் படைத்து காட்டியவர். மரபு ரீதியாக வரும் பெண்ணின் புறத்தோற்ற வர்ணனைகளை புறம் தள்ளிய எழுத்தாளர். தான் ஒரு பிராமண குலத்தில் பிறந்திருந்தாலும் மனுதர்ம சிந்தனைகளையும் கட்டுகளையும் கலைந்து பெண் அனைத்திலும் கணவனைச் சார்ந்தே செயல்பட வேண்டும் என்ற எண்ணங்களை தன் எழுத்தின் மூலம் வேரோடு வெட்டி வீழ்த்தியவர் என்பது இவ்வாய்வின் வழியே புலனாகிறது.

## References

இராஜம் கிருஷ்ணன் (2017) கரிப்பு மணிகள்.

இராஜம் கிருஷ்ணன் (2017) மாறி மாறி பின்னும்.

இராஜம் கிருஷ்ணன் (2011) கூட்டுக் குஞ்சுகள்.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author's have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License